# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2494/20 - 2026 ජුනි මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.06.25**

2494/20 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**25அ மற்றும் 70இ என்னும் பிரிவுகளுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1) (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 9729 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட 2026, மே 04 ஆந் திகதியிடப்பட்ட சான்றிதழின் கீழிருந்து சொல்லப்பட்ட றோயல் இன்ஸ்டிடியூட் ஒப் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட், றோயல் இன்ஸ்டிடியூட் கெம்பெஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என கூட்டிணைக்கப்பட்டிருக்கின்றதுமான றோயல் இன்ஸ்டிடியூட் ஒப் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2021, சனவரி 01 ஆந் திகதிய 2208/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளை, "றோயல் இன்ஸ்டிடியூட் ஒப் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, சொல்லப்பட்ட கட்டளையில் எங்கெல்லாம் அச்சொற்கள் தோன்றுகின்றதோ அங்கெல்லாம் "றோயல் இன்ஸ்டிடியூட் கெம்பெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் மற்றும் மேற்சொல்லப்பட்ட பிரிவுகளின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, அறிவித்தல், ஒப்பந்தம், தொடர்பாடல் அல்லது வேறு ஆவணங்களின் "றோயல் இன்ஸ்டிடியூட் ஒப் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட்" என்னும் ஒவ்வொரு குறிப்பீடும் "றோயல் இன்ஸ்டிடியூட் கெம்பெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின்" குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டுமென இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.


1A - G 47114 - 283 (2026/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலும், 2021, சனவரி 01 ஆந் திகதிய 2208/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் அதன் மீது வழங்கப்பட்ட ஏதேனும் தத்துவங்களைப் பின்பற்றி இக்கட்டளை நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்னர் சொல்லப்பட்ட றோயல் இன்ஸ்டிடியூட் ஒப் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட்டினால் பிரயோகிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம் அல்லது புரியப்பட்ட ஏதேனும் கடமை அல்லது பணி எல்லா நோக்கங்களுக்காகவும் றோயல் இன்ஸ்டிடியூட் கெம்பெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் வலிதுடையவாறு பிரயோகிக்கப்பட்டதும் புரியப்பட்டதுமாகக் கருதப்படுதல் வேண்டும்.

**கலாநிதி ஹரிணி அமரசூரிய**
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி
அமைச்சர்.

கொழும்பு,
2026, யூன் மாதம் 15 ஆந் திகதி.

EOG 06-0289

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது